முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.
S.C. No.24/2023

அ.சா.9 தேதி. 20.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்ரணியன் | த/பெ. | வேலு |
| வயது | 63 | தொழில் | ஓய்வு காவல் ஆய்வாளர் |
| கிராமம் | சென்னை | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கடந்த 2022 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியற்றி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு மயிலாடுதுறை காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவர் பதிவு செய்து எனது மேல் விசாரணைக்கு வைத்திருந்த மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 1481/2021 வழக்கு கோப்பை நான் எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.06.2021 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், காமராஜ், ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அசாஆ11** ஆகவும், மாதிரி வரைபடம் **அசாஆ12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் மற்றும் சாட்சிகள் மணிவேலன், கமல்ராஜ், மதியழகன், சந்திரசேகரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவுசெய்தேன்.

பின்னர் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிளை தேடிப்பார்த்ததில் 1ம் எதிரி ரித்தீஸ் என்பவரை அன்று பகல் 12.00 மணிக்கு மூங்கில் தோட்டம் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து சாட்சிகள் சம்பந்தம்,. கல்யாணசுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்பதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.சா.ஆ13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியின் வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்த அவர் எடுத்து ஆஜர் செய்த உடைந்த செங்கல்

மற்றும் சவுக்கு உருட்டு கட்டை ஆகியவற்றை 27.06.2021 பகல் 14.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அசாஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருட்கள் உடைந்த செங்கல் மற்றும் உருட்டு கட்டை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். பின்னர் கைப்பற்றப்பட்ட தடய பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து அன்றே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அசாஆ15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் சமுத்திரம் கல்யாண சுந்தரம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். நான் பணி மாறுதலில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்றதால் எனது புலன் விசாரணையின் வழக்கு கோப்புகளை நிலையத்தில் வைத்துச்சென்றேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

இரண்டு நாட்களுக்கு பிறகுதான் முதல் தகவல்அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அசா1ற்கு முதல் சிகிச்சை அளித்த அருண்பிரியா மருத்துவமனையிலிருந்து விபத்து பதிவேடு எதையும் பெறவில்லை. சிகிச்சை அளித்த மருத்துவரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அசா1 எனது விசாரணையில் 2ம் எதிரியின் மகளை அவரது மாமா வீட்டில் நின்று கொண்டிருந்தபோது அவரிடம் போய் ஏன் பேச மறுக்கிறாய் என கேட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2ம் எதிரி அசா1 தலையில் தாக்கியதாகவும் இத்தோடு ஒழிந்து போடா என்று சொன்னதாகவும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தகராறு நடந்ததாகவும், அந்த சமயத்தில் சத்தம்கேட்டு ஊர்காரர்களான கமல்ராஜ், மதியழகன் ஓடி வந்ததாக மேற்குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். தஞ்சாவூர் மருத்துவமனையில் அசா1ஐ சிகிச்சைக்காக சேர்த்த நபரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவரின் விபத்து பதிவேட்டில் 5 நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அருண்பிரியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அசா1ன் அம்மா அழைத்துச்சென்றார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை

என்றால் சரிதான், வழக்கின் சாட்சியான சந்திரசேகர் தான் அசா1ன் தகப்பனார் ஆவார்,. அவரது வீடு எங்குள்ளது என்று வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

1வது எதிரியிடமிருந்து எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை. அவர் தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை. அதனால் தான் மருத்துவ சிகிச்சை எடுத்தாக சொல்லும் அருண்பிரியா மருத்துவமனையில் விபத்து பதிவேடு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அசா1 6 நாட்கள் சுயநினைவில் இல்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு. அசா1, 2ம் எதிரியின் மகளை திருமணம் செய்வதாகக்கூறி தகராறு செய்து அவரை தாக்கியுள்ளார் அதனை மறைப்பதற்காக ஒரு பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் தடயப்பொருட்கள் அனைத்தும் வழக்கிற்கேற்ப பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. பார்வை மகசர் வரைபடம். கைப்பற்றுதல் மகசர் ஆகியவை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சாட்சிகளை எல்லாம் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.